[1983 பிப்ரவரி 14]

கள். அனைவரும் புரிந்து கொள்ளக்கூடிய எளிய நல்ல தமிழ்ச் சொற்கள் ஏராளம் இருக்கின்றன. அத்தகைய நல்ல, எளிய, புரிந்து கொள்ளக்கூடிய தமிழ்ச் சொற்கள் சட்ட மொழி பெயர்ப்புகளில் அமையும்.

சிறைச் சாலைகளில் முதியோர் கல்வித் திட்டத்தை அமுல்படுத்தும் திட்டம்.

* வினா எண் 269—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறைச்சாலையில் உள்ள கைதிகளின் அறியாமையைப் போக்க எல்லா சிறைச் சாலைகளிலும் முதியோர் கல்வித் திட்டத்தை அமுல் செய்ய மாநில அரசு எண்ணியுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) எல்லா மத்திய சிறைகளிலும் உள்ள கைதிகளுக்கு ஏற்கனவே முதியோர் கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) தற்பொழுது 1251 சிறைவாசிகள் முதியோர் கல்வி வகுப்புகளில் கல்வி பெற்று வருகின்றார்கள்.

திரு. என். பழனிவேல்: நம் தமிழகச் சிறைகளில் இன்றைய தினம் பல்லாயிரக்கணக்கான கைதிகள் ஆயுள் கைதிகளாகவும் பலாண்டு தண்டனைக் கைதிகளாகவும் இருந்து கொண்டிருக்கிறார்கள். அப்படி உள்ள நிலையில் 1251 பேர்கள் மட்டுமே முதியோர் கல்வி பெற்று வருகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் முழுமையாக அனைவருக்கும் கல்வி கற்றுக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: சிறையில் இருக்கிற கைதிகள் கல்வி கற்கிறபோது அவர்கள் பண்பட்ட உள்ளம் பெறுவதற்குக் கூட அதை ஒரு வாய்ப்பாக பயன்படுத்த முடியும் என்று அரசு கருதுகிறது. அந்த அடிப்படையில்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியவாறு இன்னும் அதிகமான பேர்கள் இந்த முதியோர் கல்வியால் பயன்பெறக்கூடிய அளவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கு. ரமணி: சிறைச் சாலைகளின் உள்ளே இருக்கும் கைதிகளில் முதியோர்கள் எனப்படுவோர் ஆயிரக்கணக்கான பேர்கள் இருக்கிறார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள கணக்குப்படி பார்த்தால் ஒரு சிறிய பகுதிக்கு மட்டும் கல்வி, எழுத்தறிவு இல்லாதவர்களுக்கு—எழுத்தறிவு அளிப்பது

மட்டும் தான் நோக்கமா? சமுதாயத்தில் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய குறைந்த பட்சக் கல்வி கிடைக்காமல் இருப்பதால் அது கிடைக்கக்கூடிய அளவிற்கு கொடுக்க ஏற்பாடு உள்ளதா? ஆகவே முதியோர் அத்தனை பேர்களுக்கும் அந்தக் கல்வியைக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: எழுதப் படிக்க சிறைவாசிகள் கற்றுக்கொண்டு அதன் மூலமாக உள்ளத்தைப் பண்படுத்தக்கூடிய அளவிற்கு நல்ல சில புத்தகங்களைப் படிக்கக் கூடிய அளவிற்கு அவர்கள் உயர வேண்டும் என்பதுதான் நோக்கம். லைப் ப்ரிஸினேர்ஸைப் பொறுத்த வரையில் கிட்டத்தட்ட 14 ஆண்டுகள் அவர்கள் சிறையில் இருக்க வேண்டியிருக்கிறது. எனவே அந்தக் கல்வி அவர்கள் நல்ல மறுவாழ்வு பெறக்கூடிய அளவிற்கு பலன் உள்ள கல்வியாக அமைய வேண்டும் என்பதுதான் நல்லது. அந்த அடிப்படையில் பிரச்னைகளை அரசு அணுகும்.

திரு. என். பழனிவேல்: சிறைச் சாலைகளில் தற்போது 1,251 பேர்களுக்கு கல்வி கற்றுக் கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சுமார் எவ்வளவு பேர்கள் இப்போது கல்வி கற்கக்கூடிய தகுதியுடையவர்களாக இருக்கிறார்கள் என்ற கணக்கை அரசு எடுத்துள்ளதா? அதே போல் இன்று சாதாரண துணைச் சிறைச் சாலைகளில் கூட ஆறு மாதம், ஒரு ஆண்டு என்று தண்டனை பெற்ற கைதிகளில் கல்வி அறிவு இல்லாதவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு கையெழுத்து போடக் கூடிய அளவிற்காவது சொல்லிக் கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: அந்தத் தகுதி படைத்தவர்கள் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்பது பற்றி விவரக் குறிப்பு என்னிடமில்லை. ஆனால் குறிப்பிட்டதொரு காலத்திற்கு மேல் சிறையில் இருக்கிறவர்கள் எல்லாம் கல்வி அறிவை குறைந்த பட்சமேனும் பெறவேண்டும் என்ற அணுகுமுறையை மேற் கொள்வது நல்லது என்ற அடிப்படையில் திரு. ரமணி அவர்கள் கேட்ட கேள்விக்குக்கூட அந்தப் பதிலைச் சொன்னேன். எனவே சிறையிலுள்ள கைதிகள் குறைந்தப்பட்சக் கல்வியினைப் பெறவேண்டும், எந்தத் தரப்பு கைதியாக இருந்தாலும்—என்ற நோக்கத்தோடு பிரச்சனையை அரசாங்கம் அணுகும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1983 பிப்ரவரி 14]

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சிறைச்சாலைகளிலே கைதிகளுக்கு வாழ்க்கை வளம்பெற, கல்வி கற்பிக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எந்தெந்த சிறைச்சாலைகளிலே, எத்தனை பேர்களுக்கு, எந்த நேரத்தில் கல்வி கற்பிக்கப்படுகின்றது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை சிறைச்சாலையிலே 149 பேர்களும், மதுரையிலே 336 பேர்களும், சேலத்தில் 97 பேர்களும், வேலூரில் 213 பேர்களும், கடலூரிலே 29 பேர்களும், திருச்சியில் 138 பேர்களும், கோவையில் 110 பேர்களும், பாளையங்கோட்டையில் 135 பேர்களும், மாநில மகளிர் சிறைச்சாலையில் 44 பேர்களும், ஆக மொத்தம் 1251 பேர்கள் கல்வி பெறுகிறார்கள். எந்த நேரம் என்ற தகவல் என்னிடத்திலே இல்லை.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, சிறைச்சாலை கைதிகள் கல்வி கற்பதோடு மட்டுமல்ல. பொது அறிவு, மற்றும் அரசியல் விவகாரங்கள் தெரிந்து கொள்வதற்காக காலை நேரத்தில் ஒரு மணி நேரம் அவர்களுக்கு இப்படிப்பட்ட ஒரு வகுப்பு நடத்த வழிவகைகளை அரசு செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

தூத்துக்குடி மீனவர்களுக்கு ஏற்பட்ட சேதம்.

* வினா எண் 262—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி அருகில் 1982ம் ஆண்டு ஜூன். ஜூலை மாதங்களில் 10-க்கு மேற்பட்ட தைவான் நாட்டு மீன்பிடி படகுகள் வந்து மீன் பிடிப்பதாகவும், இதன் காரணமாக தூத்துக்குடி மீனவர்களின் வலைகள் சுமார் பல லட்ச ரூபாய்க்கு சேதம் ஏற்பட்டுள்ளதென்பதை தமிழக அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் என்ன?

(இ) அரசு என்ன நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ), (ஆ) மற்றும் (இ) விவரமான அறிக்கை ** சட்டப் பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

** 359-ம் பக்கத்தில் இணைப்பு II-ஆக அச்சிடப் பெற்றுள்ளது.